# இரட்சணிய யாத்திரிகத்தில் அரண்மனைக் காட்சிகள்

*முனைவர் ச. ஸ்டெல்லா பர்வதம்*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
மகளிர் கிறித்தவக் கல்லூரி, சென்னை

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i2-July.6473

இரட்சணிய யாத்திரிகம் என்றி ஆல்பிரட் கிருட்டிணப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட ஒரு காப்பிய நூல் ஆகும். கிறித்துவத் தமிழ்க் காப்பியங்களுள் சிறப்பு வாய்ந்த காப்பியம் இரட்சணிய யாத்திரிகம்.

**முன்னோர் நூலின் முடி பெருங் கொத்துப்**
**பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி**
**அழியா மரபினது வழி நூலாகும்.** **(நன்னூல் நூற்பா - 7)**

முதல் நூலை முழுவதும் ஒத்துச் சிறிது வேறுபட்டு இருப்பது வழி நூலாகும். ஆங்கில நாட்டவரான ஜான் பனியன் என்பவர் எழுதிய திருப்பயணியின் முன்னேற்றம் (PILGRIM'S PROGRESS) என்னும் நூலைத் தழுவித் தமிழ்ப் பண்பாடு ஒரு சிறிதும் தவறாமல் எழுதப்பட்ட நூல் இரட்சணிய யாத்திரிகம். இரட்சணிய யாத்திரிகம் என்பதன் பொருள், கடவுளால் இரட்சிக்கப்படுவது குறித்து உயிர் செய்யும் யாத்திரை என்பதாகும். "வாரன் என்பவர், பக்தி கவிதை உருவக நிலையிலன்றி அமைய இயலாததுபோல தோன்றும், அது உண்மையே என்கிறார். இரட்சணிய யாத்திரிகம் முற்றுருவகத்தாலான ஒரு காப்பியம். பக்திமிக்க யாத்திரிகன் கிறிஸ்துவின்பால் கொண்ட பக்தி வாழ்வில் அருள்வழி நின்று இடையுறுகள் பல எதிரிட்ட போதிலும் தளராது திருநெறியில் முன்னேறி வீடுபேற்றினை அடைகிறான்" என்று நூலின் உட்பொருளை டாக்டர் வி ஞான சிகாமணி விளக்குகிறார். *(இரட்சணிய யாத்திரிகம் ஓர் ஆராய்ச்சி, ப. 57)*

இரட்சணிய யாத்திரிகத்தில் வியாக்கியானி அரண்மனைப் படலத்தில் வியாக்கியானி, முக்தி உலகை நோக்கி பயணம் செல்லும் கிறித்தியானுக்கு அரண்மனையின் பல்வேறு இடங்களை ஒவ்வொன்றாகக் காட்டி அதன் உட்பொருளையும் விளக்கிக் உரைக்கிறார்." கிறித்தவன் இடுக்க வாயில் என்ற இடத்தை கடந்து வியாக்கியானி என்பவன் வீட்டை அடைகிறான். வியாக்கியானி கிறித்துவ வாழ்வின் பல்வேறு நிலைகளை உதாரணங்களுடன் அவனுக்கு உணர்த்துகிறான். விசுவாசத்தில் உறுதியடைந்த கிறித்தவன் பரிசுத்த ஆவியானவரின் துணையுடன் தன் ஆன்மீகப் பயணத்தைத் தொடர்கிறான்" என்று முனைவர் யோ ஞானசந்திர ஜாண்சன் குறிப்பிடுகிறார். *(கிறித்தவக் காப்பியங்கள் ப-447)* வியாக்கியானி வேதப்பொருளை விளக்கிக் கூறுபவர்.

அவர் கிறித்துவ வாழ்வின் பல்வேறு நிலைகளைக் காட்சிப்படுத்தி அதன் விளக்கத்தை எடுத்துரைக்கும் பாங்கினை இக்கட்டுரையில் காண்போம்.

**முதல் காட்சி**

வியாக்கியானி, கிறித்தியானுக்கு முதலாவதாக ஓர் உருவத்தைக் காட்டுகிறார்.

***வண்ணவக் கடிமனை மருங்க ரங்கணைந்***
***தெண்ணருங் குணத்தபா வனையி யைந்தவோர்***
***புண்ணிய வுருக்கவின் பொலியத் தீட்டிய***
***கண்ணடிப் படிவத்தை யவற்குக் காட்டியே.***

***(வியாக்கியானி அரண்மனை படலம் - பாடல் 15)***

அது அழகுடைய தூயபளிங்கு உருவம். அவ்வுருவம் “எம்மை ஆட்கொண்ட மெய்யறிவும், விண்ணுலக வேந்தரின் திருவுள்ளமே எனது விருப்பம் என்று வாழ்ந்திருக்கும் ஞானாசிரியரின் சாயல்” என்று உணர்ந்து கொள் என்றார். மழையை எதிர்நோக்கும் பயிர்போல நம் தலைவரது முகத்தின் திருவருளை எதிர்பார்த்து வாழுவது போலவும், அவர் கண்கள் வானுலகைக் காணும் தன்மையையும், அவரது உதடுகள் உண்மையைக் கூறுவதால் சிவந்தும், கையிலுள்ள திருமறை நூலும் விளங்கும் திருக்காட்சி, ஐயம் கொள்ளும் மக்களுக்கு ஆன்மஞானத்தை அறிவுறுத்தும் வழியையும் காட்டுகிறது எனவும் அறிந்து கொள் என்றார். அடுத்து அவ்வோவியத்தின் பக்கத்தில் மூடியுள்ள இருள், கடவுள் நல்கும் பதவியை விரும்பிய பெருந்தவமுடையோர்களால் மாய இவ்வுலக வாழ்வு அனைத்தையும் “சீ” என்று இகழ்ந்து தள்ளிவிட்ட செய்கையைத் தெரிவிக்கிறது என்றும், அவரது தலை மீதுள்ள சீவகிரீடம் அவர் பொன்னுலகில் அடையும் பேரின்ப மாட்சிமையாகிய உயர்ந்த நிலையைக் காண்பிக்கிறது என்றும் அறிந்து கொள்என்றார்.

மேலும் வியாக்கியானி இவ்வுலகத்தை மூடும் காரிருள் கதிரவனால் முற்றிலும் நீங்குவது போல மண்ணுலகில் வாழும் மக்களுக்கு உண்டாகும் திசைமயக்கத்தை நீக்கி, மெய்வழி காட்டும் ஞானாசிரியர் இவர் ஒருவரே என்றும் கூறினார்.இவ்வாறு அவ்வுருவத்தின் பொருளை விரிந்துரைத்து இந்த நல்ல முறையை நீயும் விரும்பி பின்பற்றுதல் வேண்டும்என்று கூறினார்.

**இரண்டாம் காட்சி**

வியாக்கியானி, கிறித்தியானை அழைத்துக் கொண்டு சீர்கெட்டு மிகவும் தூசி படிந்து கிடந்த ஒரு மண்டபத்தை அடைந்தார் வியாக்கியானி.

***என்றதன் பொருள்விரித் தியம்பி யென்றுமிந்***
***நன்றிகொண் மாதிரி நயந்து கொள்கெனாச்***
***சென்றன னவனொடுஞ் சீர்சி தைந்தெழில்***
***குன்றிவெவ் வியற்றுகள் குழுமு மண்டபம்.***

***(வி.அ.படலம்-பாடல் - 23)***

இம்மண்டபத்தின் அழுக்கு நீங்குமாறு தூய்மை செய்யுங்கள் என்று வியாக்கியானி கட்டளையிட்டார். ஒருவன் துடைப்பத்தினால் பெருக்கினான். அப்பொழுது அங்குள்ளோர் மூச்சு விட முடியாதவாறு தூசி எழுந்தது. உடனே அவர் பெண்ணை நோக்கி “தண்ணீர் கொண்டு தெளி” என்றார். அவள் நீரை நன்றாகத் தெளித்தாள். இக்காட்சியின் பொருளை யாதொன்று கேட்க அவர் கீழ்க்கண்டவாறு விளக்கினார்.

இம்மண்டபம் வானோர் குலத்தின் தலைவர் வீற்றிருக்க முற்காலத்தில் அமைக்கப்பட்டது. பின்பு பேய்க்காற்று வந்து புகுந்ததால் அதன் அழகு கெட்டுப்போயிற்று என்றார். இறைவன் உடன்படிக்கையைக் குலைத்த மனுமகன் உள்ளத்தைப் போன்றது இம்மண்டபம். இதனை மூடி, அழகைக் கெடுத்த தூசியாகிய பிறவித் தீவினையே தீய குணங்களை வளர்க்கும் தாய் என்றும், மக்கள் செய்கின்ற தீய செயல்களுக்கு அதுவே மூலகாரணம் என்றும் கூறினார். மேலும் அடர்ந்த தூசி நீங்கும்படி அதைத் துடைத்த மகனால்

குறிக்கப்படுவது நியாயப்பிரமாணம். நீரைத்தெளித்த மகளால் குறிக்கப்படுவது சுவிசேஷ ஞானமாகும்.

விதிவிலக்குகள் அடங்கியது நியாயப்பிரமாணம். மக்கள் தேடிக் கொள்ளும் தீவினையின் பயன் அவர்களுக்கு இம்மை மறுமை இரண்டிலும் தருகின்ற கேடுகளை எடுத்துக்காட்டி அவரை நரகக்குழியில் தள்ளும் பேரின்ப வீட்டில் கொண்டு சேர்க்காது என்றார். சுவிசேஷ ஞானம் அருள் நிறைந்தது. மக்கள் அனைவருக்கும் பொருந்தும் இயல்புடையது. வருந்துகின்ற நம் உள்ளத்தின் குற்றங்களை நீக்கி நல்ல தன்மையையும், தூய பக்தியையும் உள்ளத்தில் விதைத்து, வளர்த்து, விண்ணுலக இன்பத்தை விளைவிக்கக் கூடியது என்றார். உலக மக்கள் பாவங்களிலிருந்து விடுதலை அடையும் பொருட்டு குருவாக வந்தவர் இயேசு கிறிஸ்து. அவர் அருளிய அறிவுரையானது, பாவமாகிய நச்சுமரத்தை வெட்டும் கோடாரி ஜீவதருவில் தோன்றும் தெய்வக்கனி ஆகும். இயேசு கிறிஸ்துவின் திருவாயிலிருந்து வெளியான மெய்யுரை, தன்பால் அன்பு கொண்டோரின் ஆன்மநோயை அகற்றும் சஞ்சீவி மருந்தாகும்: அமிர்தமாகும். மனத்தின் அறியாமை நீங்க ஒளிவிடும் நந்தா விளக்கு.

***பாவியென் றுணர்ந்துபுண் பட்ட நெஞ்சர்க்குத்***
***தேவநீ தியின்வருந் திகிலை மாற்றிடுந்***
***தாவரு நித்யஜீ வனையுந் தந்திடுந்***
***தீவினை யறவரு செம்மல் வாசகம்.***

***(வி.அ.படலம் - பாடல் - 36)***

இயேசுவின் அறிவுரை துன்ப நெருப்பு சுடும் அடியவர்களுக்கு அந்நெருப்பை அணைக்கும் பேரின்ப வெள்ளமாகும்.

### மூன்றாம் காட்சி

கிறித்தியானுக்கு மூன்றாவதாக, சிறிய அறை ஒன்றில்வாழும் இருவரைச் சுட்டிக் காட்டினார்.

***மற்றிதை மனக்கொளென் றுணர்த்திமாடொரு***
***சிற்றறை புகுந்தனன் றெரியக் காட்டினான்***
***புற்றுறை யரவெனப் புழுங்கு மாத்திரன்***
***செற்றமில் சாந்தனென் றிருவர் சீரினை***

***(வி.அ.படலம் - பாடல் - 39)***

புற்றில் வாழும் பாம்புபோல் மனம் புழுங்கி சீற்றத்துடன் காணப்படும் ஒருவன். அமைதியுடன் இருக்கும் மற்றொருவன். அமைதியுடன் காணப்படும் சாந்தன் முகம் செந்தாமரை முகம் போன்று பொலிவு பெற்றும், சினம் கொண்டவனின் முகம் கரிந்து அழகிழந்து பூங்கொத்து போன்று வாடியும் காணப்படும் இயல்பை விளக்கினார்.

ஒரே பொய்கையில் நறுமணம் வீசும் தாமரைமலரும் மணமில்லாத ஆம்பல் மலரும் தோன்றினாலும் அவை ஒன்றிற்கொன்று நிகராகாததைப்போல, இவர்கள் உடன் பிறந்தவர் எனினும் பண்பு, செயல், கருத்து முதலியற்றால் வேறுபட்டுள்ளனர். சினம் கொண்டவன், செம்மையானவழியில் செல்வோரைக் குறை கூறுபவன், தீவினை உடையவன், பொறாமை உடையன். சாந்தகுணம் கொண்டவன் நமக்குத் தேவையானவை கடவுளின் திருவுள்ளத்திற்கு ஏற்ப நடைபெறும் என்று நிறைந்த மனதுடன் இருப்பவன். முதன்மையான பண்புடையவன்.

இறைவன் தாய் தன் மக்களுக்கு பொருந்தியவாறு ஊட்டுவது போல அவரவருக்கு ஏற்ற வண்ணம் முறையே இன்பத்தையும் துன்பத்தையும் ஊட்டுவார். ஆதலால் நல்ல பிள்ளைகள் அன்னைக்கு அடங்கி நடப்பது போல நாமும் இறைவனுக்கு அடங்கி நடப்பது நம் கடமையாகும்.

### நான்காம் காட்சி

நான்காம் காட்சியாக, வியாக்கியானி கிறித்தியானை அழைத்துச் சென்று, காண்பதற்கரிய அழகிய காட்சியைக் காட்டினார்.

***ஈண்டிதை மறந்திடா திதயத் தோர்தியென்***
***றாண்டுநின் றெழுந்திள வரசற் காக்கிய***
***மாண்டகு கடிமனை புகுந்து மைந்தநீ***
***காண்டகக் கவினிய காட்சி காணென்றான்.***
**(வி.அ.படலம் - பாடல் - 54)**

அழகிய மாளிகையினுள் உறுதியான சுவரில் தெய்வபக்தி என்னும் நெருப்பு பற்றி எரிவதையும், எரிகின்ற நெருப்பை அணைக்க ஒரு வஞ்சகன் நீரைக் குடம் குடமாக ஊற்றுவதையும் காண்கிறான் கிறித்தியான். சுடர்விட்டு எரிகின்ற சுவரின் எதிரே மறைந்து நின்று மாண்பு மிக்கவர் பெருநெருப்பு அணைந்து போகாத வண்ணம் திருவருள் என்னும் எண்ணெய்யை மிகுதியாக ஊற்றி வளர்க்கும் திருச்செயலைக் உலக இன்பத்தை வெறுக்கும் கிறித்தியான் காண்கிறான். அவனிடம் வியாக்கியானி நெருப்பை அணைக்க முயலும் இக்காட்சியின் பொருள், தூயஆவி செய்யும் திருவருட்செயல் அனைத்தையும் கெடுத்து விடும்படி பிசாசுகளின் தலைவன் செய்கின்ற தீச்செயலுக்கு ஒப்பாகும் என்கிறார். மறைந்து நின்று எண்ணெயை ஊற்றுகின்ற காட்சியின் பொருள் கிறிஸ்து பெருமான் விரும்பி வந்து, பிசாசு அஞ்சியோடும்படி இடைவிடாது நமக்கு வலிமை தந்து அவரது பேரருளை வழங்கி நம்மைக் காப்பாற்றி வருகின்ற முறை இத்தன்மையாகும் என்கிறார். எல்லாம் வல்ல இறைவன் பேரருள் விண்ணுலக நன்மைகள் அனைத்தையும் நாம் பெற்றுக் கொள்ளுமாறு நமக்கு மீட்பு என்னும் பெரும் பொருளைத் தரும். இந்த உண்மையை உள்ளத்தில் எப்போதும் மறவாது நிறுத்திக் கொள்.

### ஐந்தாம் காட்சி

அரண்மனையில் ஆங்காங்கே சென்று காட்சிகளைக் காண்பாயாக! என்று கூறி அனுப்பினார். கிறிஸ்தியன் புறப்பட்டு தூய்மையான மண்டபம் அமைந்த வெண்மையான சுண்ணாம்பினால் பூசி ஒளி நிறைந்த மேல்நிலைகளை உடைய மாளிகையைக் கண்டான். அந்த மாளிகையைக் கண்டு மனமும் கண்ணும் ஒருங்கே வியப்படைந்து வானத்தைத் தொடுமாறு உயர்ந்த அந்த மாளிகையின் மேல் மாடத்தில் நிலா முற்றத்தில் மென்மையான ஆடை அணிந்து உலவுகின்ற பேரறிஞரைக் கண்டு அவரது முகமே குற்றமற்ற பண்புடையவர் எனவும் ஒரு நெறியே செல்லும் உள்ளம் உடையவர் எனவும் குற்றமில்லாத மெய்யன்பு உடையவர் என்றும் நன்றாகத் தெரிகிறது. இறைவனின் விண்ணுலகை அடைந்த பெரும் மெய்யறிவு உடையவர் போலும் என்று நினைத்தான்.

அந்த மாளிகையின் உள்ளே செல்ல நினைப்பவர் குற்றமில்லாத உள்ளத்தை உடைய நல்லவர்களின் பெயர்களைப் புத்தக சுருளில் வரைந்து வைக்குமாறு ஒரு குலமகன் மாளிகையின் வாயிலின் பக்கத்தில் முறையாக இட்டு வைத்த பொன்னால் ஆன இருக்கையில் நிலையாக அமர்ந்திருந்தான்.

***பயில்த ரும்விசு வாசமாம் பரிசையைப் பற்றிச்***
***செயிரி லாதிரு கூரொடு திகழ்திரு மந்த்ர***
***வயிர வாட்படை வலக்கையில் வாங்கிமன் னருளாற்***
***றைரி யத்தொடு வாயிலி னருகுறச் சார்ந்தான்.***
**(வி.அ.படலம் - பாடல் - 86)**

புத்தகத்தில் என் பெயரைக் குறித்து அருள்க என்று விரும்பி கேட்டு வாயிலைத் தடுத்து நின்ற வீரர்களுடன் எதிர்த்து போர் புரிந்தான். நெருங்கி குரைத்தாலும் சிங்கத்திற்கு அக்குரைப்பினால் ஏதாவது குற்றம் உண்டாக்குமா? பிசாசு கொடுத்த படைக்கலங்கள் அனைத்தையும் முறையாக கொண்டு ஆரவாரம் செய்தனர்.

***எய்த வீசிய வெறிந்தன வேதிக ளெவையும்***
***நொய்து கேடகப் புறத்தினா னூக்கின னெனினுங்***
***கைத வத்தினாற் சிற்சில வாக்கையிற் கரந்து***
***செய்த காயமென் றுணர்ந்துமங் கிடைந்திலன் றீரன்***
**(வி.அ.படலம் - பாடல் - 90)**

*மந்திர வலிமை உள்ள வாள் படையை எடுத்து வீசுதலும் தீய செயல் பகைவர் எமக்கு இன்னுயிர் தாங்குவதற்கு இடமில்லை என்று கண்டு கதிரவன் முன் இருள் ஓடுவது போல சிதறி ஓடினர் பொறி புலன்களை ஒதுக்கிய ஒப்பில்லாத வீரனுடைய முகமாகிய திங்கள் அழகுடன் ஒளி வீசியது.*

*வீரன் தலை மீது ஆனந்த தைலம் ஊற்றி நறுமண நீரால் நீராடச் செய்தனர். பொன்னாடை போர்த்தினர். வெண்பட்ட அங்கியை உடுத்துவித்தனர். தூயவன் நீங்காத பலவகையினால் நலன்களும் நுகர்ந்து இன்புற்று இருந்தார். இந்த நிகழ்ச்சி அனைத்தையும் கிறித்தியான் நேரில் கண்டு இரு கண்களிலும் இன்பக் கண்ணீர் பெருகிட இறைவனின் திருவருள் மேன்மையை வியந்தான். முழு மனதுடன் போற்றி புகழ்ந்து வியாக்கியானியாரை நோக்கி புலவர் பாடும் பெரும்புகலுடையீர் அடியேனும் உள்ளே செல்ல விடை தருதல் வேண்டும் என வேண்டினான்.*

***காலங் காட்டிய கதிர்களு முடுக்களுங் கவினி***
***ஞாலங் காட்டிய புதபௌ திகங்களு நம்பன்***
***மூலங் காட்டிய வியல்விதி முறைதவ றாது***
***சீலங் காட்டிய சீர்மையைக் கண்டனை செய்யோய்***

***(வி.அ.படலம் - பாடல்-100)***

*இறைவன் முதலில் காண்பித்த இயற்கை விதிமுறை தவறாமல் வாழ்ந்து அந்த ஒழுக்கத்தின் சிறப்பை உலக மக்களுக்கு எடுத்துக்காட்டிய பண்பினை இங்குக் கண்டுள்ளாய் என்று கூறினார்.*

*கிறித்துபெருமான் தம் வாழ்வில் “உமது திருஉள்ளமே எம் உள்ளம் என்று கூறி மகிழ்ச்சியுடன் பணிந்து ஒழுகுக என்று அறிவுறுத்திய தூய மந்திரத்தை ஒவ்வொரு நாளும் உன் உள்ளத்தில் கொண்டு வாழ விரும்புவாய்” (பாடல்-102) என்று அறிவுறுத்தினார்*

***ஆறாம் காட்சி***

*ஆறாம் காட்சியாக இருப்புக் கூட்டினுள் வேர்த்து, விம்மி, பெருமூச்சு விட்டு, உடல் நடுங்க, வெகுண்டு வெகுண்டு பார்த்து கொண்டிருக்கின்றவனைக்காட்டுகிறார். அவனை வினவி அவனோடு உரையாடுக என்று கிறித்தியானிடம் கூறினார்.*

*அவன்நல்லநிலையிலிருந்துதவறிவிழுந்து கொடுஞ்சிறையில்துன்பம் அடைந்தவன். அவன் முகத்தை உற்றுநோக்கி, “வருந்திய மனதை உடையவனே! நீ யார்? நீ ஏன் கவலை கொண்டிருக்கிறாய்? இங்கே வந்த காரணம் என்ன? உரைத்திடுக?” என வினவினான் கிறித்தியான்.*

*கொடிய சிறையில் வீழ்ந்து வருந்திய அவன், “நான் ஒரு கிறித்தவன், ஆதியில் பலரும் என்மீது எப்பிழையும் காணவில்லை” நானும் என்னில் பிழையைக் காணவில்லை” என்றான். “பிழையை ஒரு பிழை என்று உணராத பிழை உடைய மக்கள் என்னைப் பிழை இல்லாதவன் என்று பிழையாகப் புகழ்ந்திடும் பிழையைப் பிழை என்றே இகழ்ந்து மறுத்துரையாத பித்தன் ஆயினேன் யான் அங்ஙனம் என்மீது பிழை உண்டாகும்படி பிழைத்த என் பிழையைச் சிறிதும் பிழை இல்லாத நீதியை உடைய எம்பெருமான் பொறுப்பாரோ?சுசு என்று புலம்பினான்.*

***பிழையை யோர்பிழை யென்றுண ராக்கொடும் பிழையார்***
***பிழையி லானெனப் பிழைபடப் புகழ்ந்திடும் பிழையைப்***
***பிழையென் றெள்ளிடாப் பித்தன்யாய் பிழைபடப் பிழைத்த***
***பிழைபொ றுப்பரோ பிழையிலா நீதியம் பெருமான்.***

***(வி.அ.படலம் - பாடல் -109)***

*நான் சிற்றின்பக் குழியில் விழுந்தேன். உடன் பிசாசும் என்பால் வந்து என்னைக் கெடுத்தது. என்னை வளைத்துக் கொண்ட இத்தகைய கூட்டில் அகப்பட்டுக் கெட்டுப்*

போனேன். இனிக் கூறுவதற்கு என்ன உள்ளது என்றான்? பன்றியைக் கழுவினாலும் அது மீண்டும் சேற்றில் புரள்வது போலவும், நாய் தான் கக்கியதைத் திரும்பவும் தின்று ஏப்பமிட்டுத் திரிவது போலவும் உள்ளது என் குணம். அதனால் என்னை மண்ணுலக மக்களும் தள்ளி விடுவர். விண்ணுலகோரும் என்னை இகழ்வர். இனி எங்குச் செல்வேன்? கொடிய பாதாளமே எனக்குப் புகலிடம் என்றான். கடவுள் என் உள்ளமாகிய மாளிகையில் ஏற்றிய திருவிளக்கை அணைத்துவிட்டேன். இளவரசரின் திருக்குருதியை வெறுத்துவிட்டேன். இனி மீட்பு என்பது எனக்கில்லை என்று வருந்தினான்.

"நீ பாவம் செய்தவனாய் இருப்பினும், கடவுள் திருச்செயலையும், மாண்பினையும் ஆதி முதல் கேட்டிருந்தும், நீ ஏன் உன்னைக் கெடுத்துக் கொண்டாய்" என்று கேட்டான் கிறித்தியான். "சிற்றின்ப நுகர்ச்சியே மெய்யான இன்பம் என்று அதிலே நிலைத்திருந்தேன். தன்னை மறந்து இச்சிறையில் அகப்பட்டேன். கடவுள் என்னைச் சிறையில் பூட்டிவிட்டார்.
இனி எனக்கு வரும் நியாயத்தீர்ப்பிற்குத் தப்பிப் பிழைக்க நான் என்னசெய்வேன்? என்று கூறி பெருமூச்சுவிட்டு, அஞ்சு துடித்து அலறிச் சோர்ந்து விழுந்தான்.

கிறித்தியானுக்கு அறிவு கூறும் வியாக்கியானி, மகனே நீ இங்கே கண்டும் கேட்டும் அறிந்த இக்காட்சியையும், இதன் பொருளையும் உன் மனதில் பதித்துக்கொள் என்றார். நீ மேற்கொண்டுள்ள தவத்தையும், ஞான ஒழுக்கத்தையும் எரித்து அழிக்க வல்லது ஆசை, காமம் எனும் பெருநெருப்பு. அந்நெருப்பில் உன்னைப் பற்றிக் கொள்ளாத வண்ணம் ஐம்பொறிகளையும் அடைத்து வை என்றார்.

தொண்டருக்கு அறிவு கொளுத்தும் தூய திருமறைவல்லார், பின் கிறித்தியானை நோக்கி, ஒருவரைக் காமம் என்னும் பேய் பிடிக்கும் பொழுது அவரது மதிநலத்தைக் கெடுக்கும். தீய செயல்கள் பெருகும். தாம் குடியிருக்கும் ஊரில் பகையை மிகுதியாக்கும். கொடிய குற்றங்கள் வந்து சேரும். அவ்விடத்தை நரகம் ஆக்கிவிடும். உயர்ந்தோர் கூறும் அறிவுரையையும் கேட்கவிடாது. உள்ளமாகிய திருக்கோவிலையும், செவியாகிய திருவாயிலையும் அடைத்துப் பூட்டி விடும்.

சிற்றின்பத்தினால் விளையும் பயன் எத்தகையது என்று நீ உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிவாக அறிந்து கொண்டாய். சிற்றின்பப் பற்றுக்களை அறுத்து தவஞ்செய்யும் தூய உள்ளம் உடையவர்களே தூய்மையான கடவுள் உலகில் பேரின்பமாகிய விருந்துண்டு மகிழும் தன்மையுடையார். இத்தகைய உண்மையை இறுதி வரை மறவாது இறைவன் காட்டிய வழியில் செல்க என்றார்.

கிறித்தியானை நோக்கிஉன் மனதில் தோன்றிய கருத்து என்ன? என்று கேட்க அவர் என் உள்ளத்தில் இருந்த அச்சம் நீங்கி நீங்கியது. இறைவனை முழுவதும் நம்பி உள்ளேன் என்று கூறினார். உடனே நம்மை எரித்து அழிக்க வல்லதும் தீய செயல்களைப் போக்க வல்லதும் நம்மிடம் நல்ல செயல்களை உண்டாக்க வல்லதும் முடிவு காலத்தில் நம்மை காக்க வல்லதும் எல்லாம் இறைவனின் அருளை ஆகும் என்று கூறினார்.

பலவகை காட்சிகள் ஓரிடத்திலே சேர்ந்துள்ளதும் காவல் சூழ்ந்ததும் ஆகிய இந்த மாளிகையின் மாண்பு கண்டு அதனை மனதில் வைத்து விண் வீட்டு நெறியில் கடைபிடிப்பவர் அந்த அருள் வழி தொலைவில் உள்ளது என்று ஒரு காலம் நினைக்க மாட்டார் இம்மாளிகையின் சிறப்பு அத்தன்மை உடையது. ஆதலால் அம்மனையின் மாண்பை நன்கு மதித்துநல்ல நினைவுடன் செல்வதற்கு உரிய விண்வீட்டு நெறியில் நன்கு சென்று இறைவன் திருநாட்டினை அடைவாய். தூய ஆவியின் துணை உனக்கு எவ்வகையிலும் கிடைக்கும் ஆதலால் நீ மனதுன்பம் நீங்கி வழி நடந்து

செல்வாயாக! இறைவனின் அன்பு பொருந்திய உண்மையான அருள் விரிவுரையாளர் இங்ஙனம் அறிவுரை சொல்லி வாழ்த்துக் கூறி அனுப்பினார் கிறிஸ்தியானும் அவருக்கு நன்றி செலுத்தி வழிபட்டான்.

இக்கட்டுரையின் வழி வியாக்கியானி ஒவ்வொரு காட்சியையும், அதன் உட்பொருளையும் கிறித்தியானுக்கு விளக்குவது நமக்கும் வாழ்வில் கடைதேற வழிவகுக்கும். நாமும் அவர் கூறும் அறிவுரையைக் கேட்டுஇறைகாட்டும் வழிஏற்று நடப்போம்.

## துணைநூற் பட்டியல்

### முதன்மை ஆதாரம்

1. புலவர் சே. சுந்தரராசன்., இரட்சணிய யாத்திரிகம் பகுதி-1, பாரி நிலையம், 184, 88 பிராட்வே சென்னை. முதல் பதிப்பு 2014

### துணைமை ஆதாரம்

2. முனைவர் யோ ஞானசந்திர ஜாண்சன்., கிறித்தவக் காப்பியங்கள்., உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை. முதற் பதிப்பு 2013
3. டாக்டர் வி ஞான சிகாமணி., இரட்சணிய யாத்திரிகம் ஓர் ஆராய்ச்சி, கிறிஸ்டியன் சொசைட்டி ஃபார் ஓரியன்டல் கல்சுரல் அண்டு சோசியல் ஸ்டடீஸ், சென்னை. முதல் பதிப்பு 1983
4. ஆரோக்கியசாமி. இரா., கிறிஸ்துவ இலக்கிய வரலாறு
5. https://www.tamilvu.org/ta/library-l0900-html-l0900ind-118185